[6th August 1966

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்டம் இந்த மன்றத்தில் வந்தபோது, அதிலுள்ள குறைகளை மாவட்டங்களில் இருக்கின்ற கலெக்டர்கள் கவனித்து, ரயத்துக் களுக்கும் பட்டா கொடுப்பார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் உறுதி கூறினார்கள். ஆனால் இப்போது போடப்பட் டிருக்கும் உத்தரவின்படி லான்ட் ஓனர்களுக்கு மட்டும்தான் பட்டா கொடுக்க முடியும், ரயத்துக்களுக்குப் பட்டா கொடுப்பதற் கில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, ரயத்துக்களுக்கும் பட்டா கொடுக்கின்ற அளவில் இந்த உத்தரவை மாற்றுவதற்குச் சர்க்கார் முன்வருமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்த உத்தரவின் விவரங்கள் இப்போது என்னிடமில்லை. இதைப்பற்றி கனம் அங்கத்தினர் விரிவாக எழுதி அனுப்பினால் கவனிக்கலாம்.

* 170 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any representations were received by the Government from the inam ryots of Navalok village, North Arcot district for notifying the village under Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act; and

(*b*) the details of the action taken by the authorities?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The matter is under consideration of the Government.

கடையநல்லூர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

* 171 கேள்வி.—திரு. அ. பெ. தர்மலிங்கம் :
திரு. ஆ. தங்கவேலு : } கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) நெல்லை மாவட்டம், கடையநல்லூர் நெசவாளர் கூட்டுறவு மொத்த உற்பத்தி விற்பனைச் சங்கத்தில் நடைபெற்றுவரும் ஊழல்கள்பற்றி அதன் அங்கத்தினர் பலர் கையொப்பமிட்டுப் புகார் ஏதேனும் அண்மையில் அனுப்பியிருக்கிறார்களா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) Yes.

(*b*) An enquiry is in progress.

திரு. ஆ. தங்கவேலு : தலைவர் அவர்களே, கடையநல்லூர் மொத்த விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தில் பல ஊழல்கள் நடைபெற்றிருக் கின்றன என்று பல முறை புகார்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இப்போது இதன்பேரில் விசாரணை நடைபெற்று வருவதாக